# நன்னூல் எழுத்ததிகாரம்

பேராசிரியர்
சோம. இளவரசு

மணிவாசகர் பதிப்பகம்

# பொதுப்பாயிரம்

## பாயிரத்தின் பெயர்கள்

1. முகவுரை பதிகம் அணிந்துரை நூல்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்.

**கருத்துரை:**

முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை என்னும் ஏழும் பாயிரத்தின் பெயர்கள் ஆகும்.

**விளக்கவுரை:**

பாயிரம் - வரலாறு: முகவுரை - நூலுக்கு முன் உரைக்கப்படுவது; முகம் போல முன் அமைந்ததால் முகவுரை; நூன் முகம் என்பது அது; பதிகம் - ஐந்து பொதுவும் பதினொரு சிறப்புமாகிய பலவகைப் பொருள்களையுந் தொகுத்துக் கூறுவது. அணிந்துரை - நூலினது பெருமை முதலியன விளங்க அழகுபடுத்திச் சொல்வது; புனைந்துரை என்பதும் அது; புறவுரை - நூல் சொல்லிய பொருளல்லாதவற்றை உரைப்பது; தந்துரை - நூலிலே சொல்லப்பட்ட பொருளல்லாதவற்றைத் தந்து உரைப்பது.

இப்பெயர்கள் எல்லாம், காரணத்தால் வந்த பெயர்கள். 1

## பாயிர வகை

2. பாயிரம் பொதுச்சிறப்பென இரு பாற்றே.

**கருத்துரை:**

பாயிரம், பொதுப் பாயிரமும் சிறப்புப் பாயிரமும் என இரு வகைப்படும்.

**விளக்கவுரை:**

எல்லா நூல்களுக்கும் பொதுவாய் நூலின் முன்னே உரைக்கப் படுவது, பொதுப் பாயிரம்; ஒரு நூலுக்கே சிறப்பாக உரியதாய் நூலின் முன்னே உரைக்கப்படுவது சிறப்புப் பாயிரம். ஏகாரம் - ஈற்றசை. 2

## பொதுப்பாயிரத்தின் இலக்கணம்

3. நூலே நுவல்வோன் நுவலும் திறனே
கொள்வோன் கோடல் கூற்றாம் ஐந்தும்
எல்லா நூற்கும் இவைபொதுப் பாயிரம்.

**கருத்துரை:**

(1) நூலின் வரலாறு (2) நூலைக் கற்பிக்கும் ஆசிரியனது வரலாறு (3) அவ்வாசிரியன் மாணாக்கனது நூலைப் பாடம் சொல்லுதலின் வரலாறு (4) மாணாக்கனது வரலாறு (5) மாணாக்கன் பாடம் கேட்டலின் வரலாறு ஆகிய இவ்வைந்தும் எல்லா

நூல்களுக்கும் பொது. எனவே, இவ்வைந்து வரலாறுகளையும் விளங்கவுணர்த்துவது பொதுப் பாயிரம் ஆகும்.

**விளக்கவுரை:**

திறன், கூற்று என்பன வரலாறு என்னும் பொருள் தரும் சொற்கள். 3

## 1. நூலினது வரலாறு

### நூல்

4. நூலின் இயல்பே நுவலின் ஓரிரு
பாயிரம் தோற்றி மும்மையின் ஒன்றாய்
நாற்பொருட் பயத்தோடு எழுமதம் தழுவி
ஐயிரு குற்றமும் அகற்றி அம் மாட்சியோடு
எண்ணான்கு உத்தியின் ஓத்துப் படலம்
என்னும் உறுப்பினில் சூத்திரம் காண்டிகை
விருத்தி யாகும் விகற்பநடை பெறுமே.

**கருத்துரை:**

நூலினது வரலாற்றைச் சொல்லின் பொதுப் பாயிரம், சிறப்புப் பாயிரம் ஆகிய இருவகைப் பாயிரங்களையும் முன்னே உடையதாய் மூவகை நூல்களுள் ஒன்றாகி, நான்கு பொருள்களாகிய பயன்களுடன் கூடி, எழுவகை மதங்களையும் தழுவி, பத்துவகைக் குற்றங்களையும் நீக்கி, பத்துவகை அழகுடனே, முப்பத்திரண்டு உத்திகளைக் கொண்டு ஓத்தும் படலமும் என்று சொல்லப்படும் இருவகை உறுப்புக்களோடும் கூடிச் சூத்திரமும் காண்டிகையுரையும் விருத்தியுரையுமாகிய வேறுபட்ட நடைகளைப் பெற்று வரும்.

**விளக்கவுரை:**

மூவகை நூல்கள் ஆகியன, பின்வரும் சூத்திரங்களில் கூறப்படும். 4

### மூவகை நூல்கள்

5. முதல்வழி சார்பென நூல்மூன் றாகும்.

**கருத்துரை:**

முதல் நூல், வழி நூல், சார்புநூல் என நூல்கள் மூன்று ஆகும்.

**விளக்கவுரை:**

இச் சூத்திரம், இறையனார் அகப்பொருள் உரையில் உள்ளது. 5

### முதல் நூல்

6. அவற்றுள்
வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்.

**கருத்துரை:**

சூத்திரங்கள், பிண்ட சூத்திரமும், தொகைச் சூத்திரமும், வகைச் சூத்திரமும், குறிச் சூத்திரமும், செய்கைச் சூத்திரமும் இவற்றை ஏற்றுக்கொண்டு இவற்றின் புறத்து அடையாய் வரும் புறனடைச் சூத்திரமும் என ஆறு பிரிவுகள் உடையன.

**விளக்கவுரை:**

பிண்ட சூத்திரம் = பல திறப் பொருள்களையும் திரட்டிப் பொதுப் படக் கூறுவது. (எ.டு) ''நன்கியம்புவன் எழுத்தே'' (56) என்றாற் போல வருவன.

தொகைச் சூத்திரம் = பலதிறப் பொருள்களையும் வேறு வேறாகத் தொகுத்துச் சொல்வது; (எ.டு.) ''எண் பெயர்... பன்னிரு பாற்றதுவே'' (57) என்றாற் போல வருவன.

வகைச் சூத்திரம் = தொகுத்துச் சொல்லப்பட்டவற்றை வேறு வேறாக வகுத்துச் சொல்வது; (எ.டு.) ''மொழி முதற் காரணமாம்'' (58) என்றாற் போல வருவன.

குறிச் சூத்திரம் = இவை உயிர், இவை ஒற்று, இவை பெயர், இவை வினை என்பன முதலாகப் பெயரிட்டு அறியும் அளவில் வருவது; (எ.டு.) அம்முதல் ஈராறு ஆவி'' (63) என்றாற்போல வருவன. குறி - பெயர்.

செய்கைச் சூத்திரம் = புணர்ச்சி விதிகளை அறிந்து புணர்த்தல், முடிபு விதியறிந்து முடித்தல் முதலானவற்றைக் கூறுவது. (எ.டு.) ‘ஙனவல்லினம் வரட்டறவும்'' (209) என்றாற் போல வருவன.

புறனடைச் சூத்திரம் = புறத்து அடையாய் வந்தது; புறம் நடை - புறநடை; வேறு விதமாகிய நடக்கை எனினும் பொருந்தும்.

சூத்திரங்கள் ஆறு வகைப்படும் என்றாலும், அவையெல்லாம் குறிச் சூத்திரம், செய்கைச் சூத்திரம் என்னும் இரண்டினுள்ளே அடங்கும். 20

**உரையின் பொது இலக்கணம்**

21. பாடம், கருத்தே, சொல்வகை, சொற்பொருள்
தொகுத்துரை, உதாரணம், வினா, விடை, விசேடம்,
விரிவு அதிகாரம் துணிவு, பயனோடு
ஆசிரிய வசனம் என்று ஈரேழ் உரையே.

**கருத்துரை:**

1. மூலபாடம் 2. கருத்துரை 3. சொற்களைக் குறித்தெழுதும் உரை 4. சொல்லுக்குப் பொருள் எழுதும் பதவுரை 5. பொழிப்புரை 6. எடுத்துக்காட்டு 7. வினா 8. விடை 9. சிறப்பாக வேண்டியவற்றைத் தந்துரைத்தல் 10. வேற்றுமையுருபு முதலியன தொக்கி நிற்பின் அவற்றை வித்துரைத்தல் 11. எடுத்துகொண்ட அதிகாரம் இது

வாதலால், இச்சூத்திரத்தின் பொருள் இதுவென அவ்வதிகாரத்தோடு பொருந்த உரைத்தல் 12. ஐயுறநின்ற இடத்தில் இதற்கு இதுவே பொருள் எனத் துணிந்துரைத்தல் 13. இவ்வாறு சொல்லியதனால் வந்த பயன் இது என்று உரைத்தல் 14. பழைய நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுதல் என்று நூலுக்கு உரைகள் பதினான்கு வகைப்படும்.

**விளக்கவுரை:**

பதினான்கு வகைகளாலும் நூலுக்கு உரைகள் வகுக்கப்படும். சொல்வகை - பதச்சேதம்; சொற்பொருள் - பதவுரை; உதாரணம் - எடுத்துக்காட்டு, வினா - பொருள் விளக்கம் பெறவேண்டிய இடங்களில் தாமே வினாவை அமைத்துக் கொள்ளுதல். விடை - தாமே எழுப்பிய வினாவுக்கு விடை கூறுதல். ஆசிரிய வசனம் - முன்னோர் நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுதல். 21

### காண்டிகையுரை

22. கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினாவிடை யாக்க லானும்
சூத்திரத் துட்பொருள் தோற்றுவ காண்டிகை.

**கருத்துரை:**

கருத்துரையும் பதவுரையும் எடுத்துக் காட்டுமாகிய மூன்று வகைகளாலும் அம்மூன்றுடன் வினாவிடை என்னும் இரண்டனை யுங் கூட்டிச் சொல்லுதலாலும், சூத்திரத்தில் அமைந்த பொருளைத் தெளிவாக விளக்குவன காண்டிகையுரை ஆகும்.

**விளக்கவுரை:**

மூன்றிலும் எனப் பிரித்துக் கூறியதால், வினாவிடையின்றியும் காண்டிகையுரை வழங்கும் என்க. வினா விடை இரண்டும் சேர்ந்து ஐந்தும் அமைந்தால், ஐங்காண்டிகையுரை என்பர். 22

### விருத்தியுரை

23. சூத்திரத் துட்பொருள் அன்றியும் ஆண்டைக்கு
இன்றி யமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்
ஐயம் அகலஐங் காண்டிகை உறுப்பொடு
மெய்யினை எஞ்சாது இசைப்பது விருத்தி.

**கருத்துரை:**

சூத்திரத்திலுள்ள பொருளேயன்றி அவ்விடங்களுக்கு அவசிய மான பொருள்களெல்லாம் விளங்கும்படி, தானுரைக்கும் உரையாலும் ஆசிரிய வசனங்களாலும் மேற்கூறிய காண்டிகையுறுப்பு ஐந்தினாலும் ஐயந்தீரக் குறைவு படாமல் மெய்ப்பொருளை விரித்துரைப்பது விருத்தியுரை ஆகும்.

**விளக்கவுரை:**

காண்டிகைக்குக் கூறப்பட்ட ஐந்து உறுப்புகளுக்குமேல், மேல் கூறப்பெற்ற (சூ.21) பதினான்கு உரைகளில் பதினான்கையுமோ அல்லது ஐந்து உரைகளுக்கு மேலோ பெற்று வருவது விருத்தியுரை. 23

**நூல் என்னும் பெயர்க்குக் காரணம்**

24. பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா - எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு.

**கருத்துரை:**

தன்சொற்கள் பஞ்சாகவும், செய்யுள் இழையாகவும், செவ்விய சொற்களை அறிந்த புலவன் நூற்கின்ற பெண்ணாகவும், குறை வில்லாத வாய் கையாகவும், அறிவு நூற்கும் கதிராகவும், குற்றமில்லாத கல்வி நூல் முடியும் வழி இதுவாகும்.

**விளக்கவுரை:**

எனவே, நூலென்றது உவமவாகுபெயர். கல்வியை 'நூல்' என்றதற்கு ஏற்பச் சொற்கள் முதலியனவற்றையும் உருவகப்படுத்தி யுள்ளார். பனுவல் - செய்யுள்; கதிர் - நூற்கும் கதிர்; மை - குற்றம். 24

25. உரத்தின் வளம்பெருக்கி உள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா - மரத்தின்
கனக்கோட்டம் தீர்க்குநூல் அஃதே போல் மாந்தர்
மனக்கோட்டம் தீர்க்குநூல் மாண்பு.

**கருத்துரை:**

உடலில் இருக்கின்ற அறிவுவளத்தை வளரச்செய்து நினைக்கப்பட்ட தீமையாகிய அறியாமையின் மிகுதியைக் கெடுத்து, வளைதலால் கோட்டமரத்தினது மிக்க கோணலைப் போக்குகின்ற எற்று நூலின் தன்மையைப் போலவே, மனிதருடைய மனத்தின் கோணலைப் போக்குவது கல்விநூலின் சிறப்பாகும்.

**விளக்கவுரை:**

இதனாலும் நூலென்றது உவமவாகு பெயராம். மரம் முதலியவற்றின் கோணலைத் தீர்த்துச் செப்பஞ்செய்யும் எற்று நூல் போல, மனத்தின் கோணலத் தீர்த்துச் செப்பஞ் செய்வது நூல் ஆகும். இந்நூலும் அறிவினை வளரச் செய்து, அறியாமையைக் கெடுக்கும். 25

## 2. நூலைக் கற்பிக்கும் ஆசிரியனது வரலாறு

**நல்லாசிரியர் இலக்கணம்**

26. குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை

## மலையின் இயல்பு

28. அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்க லாகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வன்மையும் மலைக்கே.

**கருத்துரை:**

அளவிட முடியாத தன் வடிவத்தின் அளவும், அளவிட முடியாதப் பல்வேறு பொருள்களும், எத்தகைய வலிமையுடையவராலும் அசைக்க இயலாத வடிவத்தின் நிலையும், நெடுந்தொலைவில் உள்ளவராலும் காணப்படும் உயர்ச்சியும், மழை பெய்யாமல் வறண்ட காலத்திலும் தன்னைச் சேர்ந்த உயிர்களுக்கு நீர்வளம் கொடுக்கும் கொடையும் மலைக்குள்ள குணங்கள் ஆகும்.

**விளக்கவுரை:**

அளவிட முடியாத வடிவ அளவையுடைய மலை போல, அளவிட முடியாத கல்விப் பெருமையுடையவன் ஆசிரியன். அளவிட முடியாத பல்வேறு பொருள்களும் உடைய மலை போல அளவு செய்ய முடியாத பல்வகை நூல் பொருள்களையும் அறிந்தவன் ஆசிரியன். யாராலும் அசைக்க முடியாத மலைபோல, எவ்வகைக் கல்வியுடையவராலும் அசைக்க முடியாத ஆற்றல் படைத்தவன் ஆசிரியன். நெடுந்தொலைவில் உள்ளவராலும் அறியப்படும் கல்விச் சிறப்பு உடையவன் ஆசிரியன். மழை பெய்யாது வறண்ட காலத்திலும் நீர் வளத்தைக் கொடுக்கும் மலையைப் போலப் பொருள் வருவாய் இல்லாத காலத்திலும் தன் மாணாக்கர்க்குக் கல்விப் பொருளைக் கொடுக்கும் மனம் படைத்தவன் ஆசிரியன். 28

## நிறைகோலின் இயல்பு

29. ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும்
மெய்ந்நடு நிலையும் மிகுநிறை கோற்கே.

**கருத்துரை:**

நிறுக்கப்பட்ட பண்டத்தின் அளவை ஐயம் நீங்கக் காட்டுதலும், உண்மைபெறத் தான் இரு தட்டுகளுக்கும் நடுவே நிற்றலும் ஆகியவை தராசுக்கோலின் குணங்களாக மிகும்.

**விளக்கவுரை:**

பொருளின் அளவினை ஐயம் தீரக் காட்டும் துலாக்கோல் போல், ஐயம் நீங்க வினாவப்பட்ட பொருளை விளக்குதலும், இருதட்டும் மாறுபாடின்றி நடுநிற்றல் போலப் புலவர் இருவர் மாறுபட்டபோது உண்மை வெளிப்படுமாறு நடுவாக நிற்றலும் ஆகிய குணங்களால் துலாக்கோல் ஆசிரியனுக்கு உவமையாகும். 29

**கருத்துரை:**

தன்னுள்ளே போட்ட முறைப்படி இல்லாமல் முன் போடப்பட்டவற்றையும் பின்போடப்பட்டவற்றையும் அம்முறை மாறிப் போகுமாறு, கொட்டும் போது விரைவிலே தன்னுள்ளே கொண்ட கழற் காய்களைக் கொடுக்கும் செயல், கழற்காய் போட்ட குடத்தின் இயல்பாம்.

**விளக்கவுரை:**

தாம் கற்றுக் கொண்ட முறையினாலன்றி முன்னே கற்பிக்கப் பட்டவற்றையும் பின்னே கற்பிக்கப்பட்டவற்றையும் அம்முறை பிறழக் கற்பிக்கும் போது விரைவிலே தம் கருத்துக்களைக் கூறுவதால், ஆசிரியர் ஆகாதவருக்குக் கழற்குடம் உவமையாயிற்று.

கழல் - சிறுவர் விளையாடப் பயன்படுத்தும் ஒரு வகைக் காய். 32

**மடற்பனையின் இயல்பு**

33. தானே தரக்கொளின் அன்றித் தன்பால்
மேவிக் கொளக்கொடா இடத்தது மடற்பனை.

**கருத்துரை:**

தானே தன் பழங்களைக் கொடுக்கக் கொண்டால் அல்லது ஒருவர் தன்னிடம் நெருங்கி வந்து பறித்துக்கொள்ள இடங் கொடுக்காதது, மடற்பனையின் இயல்பாம்.

**விளக்கவுரை:**

தாமே தம்மிடத்திலுள்ள நூற்பொருள்களைச் சொல்லப் பிறர் அறிந்து கொண்டால் அல்லது ஒருவர் தம்மிடம் நெருங்கி வந்து வினாவி அறிந்துகொள்ள இடங்கொடுக்காதவர் ஆசிரியர் ஆகார். எனவே, இவர்களுக்கு மடற்பனை உவமையாயிற்று.

மடற்பனை - தன் வடிவம் முழுவதும் அரம்போன்ற கருக்கு மட்டை விரிந்த பனைமரம். 33

**பருத்திக் குண்டிகையின் இயல்பு**

34. அரிதிற் பெயக்கொண்டு அப்பொருள் தான்பிறர்க்கு
எளிது ஈவில்லது பருத்திக் குண்டிகை.

**கருத்துரை:**

பஞ்சை உள்ளே கொண்ட போதும் மிக முயன்று சிறிது சிறிதாக அசைக்கத் தன்னுள்ளே கொண்டு, அப்பஞ்சினைக் கொடுக்கும் போதும் தான் பிறருக்கு எளிதில் கொடுக்காதது, பருத்திக் குண்டிகையின் இயல்பாம்.

**விளக்கவுரை:**

பருத்திக் குண்டிகை - விளக்குத் திரிக்காக முன்னேற்பாடாகப் பருத்திப் பஞ்சினை அடைத்து வைத்த வாய் சிறுத்த தேங்காய்க் குடுக்கை. இக் குடுக்கையின் கண் வழியே பஞ்சினை உள்ளே திணிப்பர்; பின் தொல்லைப்பட்டு எடுப்பர்.

கல்வியைக் கற்ற காலத்தில் வருத்தத்தோடு சிறிது சிறிதாகத் தாம் கற்றுப் பின்னர்ப் பாடஞ் சொல்லும் போது அக்கல்வியைப் பிறருக்கு எளிதில் கற்றுக் கொடுக்காதவர் ஆசிரியராகத் தகுதியற்றவர்; ஆதலின் இவர்களுக்குப் பருத்திக் குண்டிகை உவமையாயிற்று. 34

### முடத்தெங்கின் இயல்பு

35. பல்வகை உதவி வழிபடு பண்பின்
அல்லோர்க்கு அளிக்கும் அதுமுடத் தெங்கே.

**கருத்துரை:**

நீர்ப்பாய்ச்சுதல் முதலான பலவகை உதவிகளையும் செய்து தன்னை வழிபாடு செய்கின்ற பண்பு இல்லாத பிறருக்குத் தன் காய்களைக் கொடுப்பது முடத்தெங்கின் இயல்பாம்.

**விளக்கவுரை:**

முடத்தெங்கு - வேலிக்கு வெளிப்புறம் வளைந்த தென்னை மரம்.

பொருள் கொடுத்தல் முதலிய பல வகைகளாலும் உதவித் தமக்கு வழிபாடு செய்கின்ற மாணாக்கர் அல்லாத பிறருக்குத் தாம் கற்ற கல்வியைக் கொடுப்பர் ஆசிரியர் ஆகார். எனவே, இவர்களுக்கு முடத்தெங்கு உவமையாயிற்று. 35

### 3. பாடஞ் சொல்லும் வரலாறு

36. ஈதல் இயல்பே இயம்பும் காலை,
கலமும் இடனும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொருள் உள்ளத்து அமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்து அவன்உளங்கொளக்
கோட்டமில் மனத்தின் நூல் கொடுத்தல் என்ப.

**கருத்துரை:**

பாடஞ் சொல்லும் இயல்பைச் சொல்லும்போது, உரிய காலத்தையும் உரிய இடத்தையும் செவ்வையாகப் பார்த்து, சிறந்த இடத்தில் இருந்து, தன் வழிபடு கடவுளை வாழ்த்தி, பாடஞ் சொல்லப் போகும் பொருளை மனத்தில் நிறைத்து, விரையாதவனாகியும், வெகுளாதவனாகியும் விருப்புடன் முகமலர்ச்சி உடையவனாய், கற்றுக்கொள்ளும் மாணவன் ஏற்றுக்கொள்ளும் தன்மையை அறிந்து, அவன் உள்ளம் ஏற்றுக்கொள்ளும்படி, சிறிதும் மாறுபாடு இல்லாத மனத்துடன் நூலைக் கற்றுக் கொடுத்தலே முறையாம் என்று சொல்லுவர். 36

### 4. மாணாக்கனது வரலாறு

37. தன்மகன் ஆசான் மகனே மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடுவோனே
உரைகோ ளாளற்கு உரைப்பது நூலே.

# சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம்

## சிறப்புப் பாயிரத்திற்குப் பொதுவிதி

47. ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே.

**கருத்துரை:**

1. நூல் செய்தோன் பெயர் 2. நூல்வந்தவழி 3. நூல் வழங்கும் நிலத்தின் எல்லை 4. நூலின் பெயர் 5. இந்நூலைக் கற்றபின் இந்நூல் கேட்கத் தக்கது என்னும் இயைபு 6. நூலில் கூறப்பட்ட பொருள் 7. இந்நூலைக் கேட்பதற்கு இன்னார் உரியர் 8. இந்நூலைக் கேட்பதால் விளையும் பயன் என்னும் எட்டுப் பொருளையும் விளக்கமாக உணர்த்துதல் சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் ஆகும்.

**விளக்கவுரை:**

யாப்பு - இயைபு. தொகுத்தல் முதலிய நால்வகை நூல் அமைப்புகளையும் யாப்பு என்று சிலர் கூறுவர்.

இச்சூத்திரம், இறையனார் அகப்பொருள் உரையில் உள்ளது. 1

48. காலம் களனே காரணம் என்றுஇம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே.

**கருத்துரை:**

1. நூல்செய்த காலம், 2. நூலை அரங்கேற்றிய அவை 3. நூல் செய்ததற்குக் காரணம் ஆகிய மூன்றினையும் மேற்கூறிய எட்டுடன் சேர்த்துப் பதினொன்றாகச் சொல்லுவாரும் உளர். 2

## நூற்பெயருக்குச் சிறப்பு விதி

49. முதல் நூல் கருத்தன் அளவு மிகுதி
பொருள்செய் வித்தோன் தன்மைமுதல் நிமித்தினும்
இடுகுறி யானும்நூற்கு எய்தும் பெயரே

**கருத்துரை:**

ஒரு நூலுக்கு 1. அந்நூலின் முதல் நூலும் 2. அந்நூலைச் செய்தவனும் 3. அந்நூலின் அளவும் 4. அந்நூலில் சொல்லப்பட்ட பொருள்களுள் மிகுதியான பொருளும் 5. அந்நூலை இயற்றியவனுக்குப் பொருள் முதலியன கொடுத்துச் செய்வித்தவனும் 6. அந்நூலின் இயல்பு முதலிய காரணங்களாலும் இடுகுறியாலும் பெயர் அமையும்.

(எ-டு.)

1. முதல் நூலால் பெயர் பெற்றன - பாரதம் முதலியன
2. கருத்தனால் பெயர் பெற்றன - தொல்காப்பியம் முதலியன

3. அளவினால் பெயர் பெற்றன - நாலடி நானூறு முதலியன
4. மிகுதியால் பெயர் பெற்றன - களவியல் முதலியன
5. பொருளால் பெயர் பெற்றன - அகப்பொருள் முதலியன
6. செய்வித்தோனால் பெயர் பெற்றன - இளந்திரையம் முதலியன
7. தன்மையால் பெயர் பெற்றன - நன்னூல் முதலியன
8. இகுறியால் பெயர் பெற்றன - கலைக்கோட்டுத் தண்டு முதலியன 3

50. தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழி பெயர்ப்பு
எனத்தகும் நூல்யாப்பு ஈரிரண்டு என்ப.

**கருத்துரை:**

1.விரிந்து கிடந்ததைத் தொகுத்துச் செய்தல் 2. தொகுத்துக் கிடந்ததை விரித்துச் செய்தல் 3. சிலவற்றைத் தொகுத்தும் சிலவற்றை விரித்தும் செய்தல் 4. ஒரு மொழியிலுள்ள நூலை மற்றொரு மொழியில் பெயர்த்தல் என்று தகுந்த நூல் யாப்பு (நூல் செய்தல்) நான்கு வகைப்படும்.

(எ.டு) 1. தொகுத்தல் - புறப்பொருள் வெண்பாமாலை (பன்னிரு படலத்தைத் தொகுத்துச் செய்யப் பெற்ற நூல்.)

2. விரித்தல் - பெரிய புராணம். (திருத்தொண்டத் தொகையை விரித்துப் பாடிய நூல்)

3. தொகைவிரி - நன்னூல் (தொல்காப்பியக் கருத்துகளைத் தொகுத்தும் விரித்தும் கூறிய நூல்)

4. மொழிபெயர்ப்பு - கம்பராமாயணம். 4

**சிறப்புப் பாயிரம் செய்வதற்கு உரியவர்**

51. தன்னா சிரியன் தன்னொடு கற்றோன்
தன்மா ணாக்கன் தகும்உரை காரன் என்று
இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே.

**கருத்துரை:**

1. தன்னுடைய ஆசிரியன் 2. தன்னுடன் பாடங்கேட்டவன் 3. தன்னுடைய மாணாக்கன் 4. தன் நூலுக்குத் தகுதியான உரையைச் செய்தவன் என்று சொல்லப் பெற்ற இந்நால்வரில் ஒருவர் சிறப்புப் பாயிரத்தைச் சொல்லுதல் முறையாகும். 5

**சிறப்புப் பாயிரம் பிறர் செய்தற்குக் காரணம்**

52. தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்தற் புகழ்தல் தகுதி யன்றே.

**கருத்துரை:**

பிறருக்குத் தோன்றாத நுட்பங்களையெல்லாம் காட்டிப் பல துறைகள் அமையுமாறு பெரிய நூலைச் செய்து முடித்தாலும் தானே தன்னைப் புகழ்ந்து கொள்ளுதல் தகுதியன்றாம்.

**விளக்கவுரை:**

நூலைச் செய்தவனே சிறப்புப் பாயிரமும் செய்தால் அது 'தற்புகழ்ச்சி' ஆகும். எனவே சிறப்புப் பாயிரத்தைப் பிறரே செய்தல் வேண்டும்.

**தற்புகழ்ச்சி குற்றமாகா இடங்கள்**

53. மன்னுடைய மன்றத்து ஓலைத் தூக்கினும்
தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும்புல வோற்கே.

**கருத்துரை:**

1. அரசனுடைய அவைக்கு எழுதும் சீட்டுக் கவியிலும், 2. தன்னுடைய கல்வியின் ஆற்றலை உணராதவர்கள் இடத்திலும், 3. பெரிய அவையில் பிறரோடு வாதம் செய்து வெல்லும் காலத்திலும், 4. தன்னை எதிரி பழித்த காலத்திலும் தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளுதல் புலவனுக்குத் தகும்.

**விளக்கவுரை:**

மேற்கூறிய நான்கு இடங்களிலும் தற்புகழ்ச்சி செய்தல் குற்றமாகாது.

புகழ்தலும் என்ற உம்மையால், இவ்விடங்களிலும் தற்புகழ்ச்சி கூடாது என்பதாம்.

**பாயிரத்தின் இன்றியமையாமை**

54. ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே.

**கருத்துரை:**

ஆயிரம் உறுப்புக்களால் விரிந்த பெரிய நூலே ஆனாலும், பாயிரம் இல்லாதது நூல் அன்றாம்.

**விளக்கவுரை:**

இச் சூத்திரம், இறையனார் அகப்பொருள் உரையில் உள்ளது. பனுவல் - நூல்.

**பாயிரத்தின் இன்றியமையாமைக்குக் காரணம்**

55. மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோள் நல்லார்க்(கு) அணியும்போல் - நாடிமுன்
ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது.

**கருத்துரை:**

மாளிகைக்குச் சித்திரமும், பெரிய நகருக்குக் கோபுரமும், நாட்டிய மாடுகின்ற மூங்கிலைப் போலத் தோள்களையுடைய மங்கையருக்கு அணிகலமும் போல எண்ணி அழகிய பொருளை

சொல்லும் பாயிரத்தைக் கூறி, எத்தகைய பெரிய நூலுக்கும் முதலில் பெரும்பாலும் சேர்த்து வைத்தார்கள்.

**விளக்கவுரை:**

மாடக்கு - மாடத்துக்கு; ஆடு - நாட்டியம் ஆடுகின்ற; இது - அழகானது.

மாளிகைக்குச் சித்திரமும் மாநகருக்குக் கோபுரமும் மங்கையருக்கு அணிகலமும் போல நூலுக்குப் பாயிரம் இன்றியமையாதது. 9

சிறப்புப் பாயிர இலக்கணம் முற்றும்.

★★★

# எழுத்ததிகாரம்

எழுத்தின் இலக்கணத்தை உணர்த்தும் அதிகாரம் எழுத்ததிகாரம் எனப்படும். இங்கு எழுத்தின் அகத்திலக்கணம், புறத்திலக்கணம் ஆகிய இருவகை இலக்கணங்களும் உணர்த்தப்படுகின்றன. இவ்வதிகாரத்தில் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என ஐந்து இயல்புகள் உள்ளன. அதிகாரம் - பெரும் பிரிவு.

## 1. எழுத்தியல்

எழுத்தின் அகத்திலக்கணத்தை உணர்த்தும் இயல். இப்பகுதியில் எழுத்தினுடைய 1. எண், 2. பெயர். 3. முறை, 4. பிறப்பு, 5. வடிவம், 6. மாத்திரை, 7. முதல்நிலை, 8. இறுதிநிலை 9. இடை நிலை, 10. போலி என்னும் இலக்கணங்கள் உணர்த்தப்படுகின்றன. இயல் - சிறுபிரிவு.

### கடவுள் வணக்கமும் அதிகாரமும்

56. பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த
நான்முகற் றொழுதுநன்கு இயம்புவன் எழுத்தே

**கருத்துரை:**

பூக்கள் நிறைந்த அசோகமரத்தின் அழகிய நிழலில் எழுந்தருளியிருந்த நான்கு திருமுகங்களை உடைய அருகக் கடவுளை வணங்கி எழுத்திலக்கணத்தை நன்றாகச் சொல்வேன்.

**விளக்கவுரை:**

இங்கே எழுத்து என்பது ஆகுபெயராய் எழுத்திலக்கணத்தை உணர்த்தியது. ஏகாரம் ஈற்றசை.

எல்லாம் வல்ல கடவுளை வணங்குதலால் எடுத்துக் கொண்ட செயல் இனிது முடியும் என்பது கருதி, ''நன்கு இயம்புவன்'' என்று தொடங்கியுள்ளார். எனவே, இது நுதலிப் புகுதல் என்னும் உத்தி. 1

இவ்வாழ்த்து வழிபடு வாழ்த்து ஆகும்.

57. எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை
முதல், ஈறு, இடைநிலை, போலி, என்றா
பதம், புணர்பு எனப்பன் னிருபாற் றதுவே.

**கருத்துரை:**

எழுத்தின் எண்ணும் (எண்ணிக்கையும்) பெயரும் முறையும் பிறப்பும் வடிவமும் மாத்திரையும் முதல்நிலையும் கடைநிலையும் இடைநிலையும் போலியும் பதமும் புணர்ச்சியும் எனப் பன்னிரண்டு வகையினை உடையது எழுத்திலக்கணம்.

**விளக்கவுரை:**

எழுத்திலக்கணம் பன்னிரண்டு வகைப்படும். இவற்றுள் எண் முதலிய பத்தும் எழுத்தின் அகத்திலக்கணம், பதம், புணர்ச்சி என்ற இரண்டும் எழுத்தின் புறத்திலக்கணம். இவ்வாறு பிரித்துக் காட்டவே சூத்திரத்தில் என்றா என்னும் எண்ணிடைச்சொல் கொடுத்தார்.

எழுத்தின் அகத்திலக்கணம் பத்தையும் எழுத்தியல் என்னும் ஓர் இயலாகவும், புறத்திலக்கணம் இரண்டனுள் எழுத்தாலாகிய பதத்தின் இலக்கணத்தைப் பதவியல் என ஓர் இயலாகவும், அப்பதம் புணரும் புணர்ச்சி இலக்கணத்தை உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என மூன்று இயல்களாகவும் அமைத்தார். இது ஒத்து முறை வைப்பு என்னும் உத்தியாகும். (ஒத்து முறை வைப்பு - இயல்களைக் காரண காரிய முறைப்படி வைத்தல்)

இச்சூத்திரம் தொகுத்துச் சுட்டல் என்னும் உத்தி. (தொகுத்துச் சுட்டல் - சொல்ல வேண்டிய செய்திகளைத் திரட்டிச் சொல்லுதல்; வகுத்துக் காட்டல் - திரட்டிக் கூறியவற்றைத் தனித்தனியே விளக்கிக் கூறுதல்.) 2

## 1. எண்

### எழுத்து இன்னது என்பதும் அதன் வகையும்

58. மொழிமுதல் காரண மாம்அணுத் திரள்ஒலி
எழுத்து; அது முதல்சார்பு எனஇருவகைத்தே.

**கருத்துரை:**

மொழிக்கு முதற்காரணமாக அமைகின்ற அணுத்திரளின் காரியமாகிய ஒலியே எழுத்தாகும். அது முதலெழுத்தும் சார்பெழுத்தும் என்று இரண்டு வகையினை உடையது.

**விளக்கவுரை:**

''ஆம்'' என்னும் பெயரெச்சம் ''ஒலி'' என்பதைக் கொண்டு முடியும். அணுத்திரள் - அணுக்கூட்டம். அது செவிக்குப் புலனாகும் அணுவாகும். இதனை ஒலி நுட்பம் என்பர்.

மொழிக்கு முதற்காரணம் எழுத்தாவது போல, எழுத்திற்கு முதற்காரணம் அணுக்கூட்டமாகும். இதனையே அணுக்கூட்டத்தின் காரியம் எழுத்தாவது போல, எழுத்தின் காரியம் மொழி என்று கூறலாம்.

அருக சமயத்தைச் சேர்ந்தவர்கள், அணுக்களினாலேயே எல்லாப் பொருளும் அமைகின்றன என்னும் கொள்கை உடையவர்கள். ஆதலால், பவணந்தி முனிவர் எழுத்துக்களும் அணுக்களினால் அமைகின்றன என்று குறிப்பிட்டுள்ளார். இது ''பிறிதொடு படாஅன் தன்மதம் கொளல்'' என்னும் மதமாகும் (பிறிதொடும் படாஅன் தன்மதம் கொளல் - பிறருடைய கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாமல் தன் மதத்தையே தான் கொள்ளுதல்.) 3

## முதலெழுத்தின் வகையும் விரியும்

### வகை - 2; விரி - 30

59. உயிரும் உடம்பும்ஆம் முப்பதும் முதலே.

**கருத்துரை:**

உயிரெழுத்துப் பன்னிரண்டும் மெய்யெழுத்துப் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துகளும் முதலெழுத்துக்கள் ஆகும்.

**விளக்கவுரை:**

முதலெழுத்துக்கள், உயிரும் மெய்யும் என வகையால் இரண்டாம்; உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு என விரியால் முப்பது வகைப்படும்.

உயிர்மெய் முதலான சார்பெழுத்துக்களுக்குக் காரணமாக இருத்தலால், இவை முதலெழுத்து என்று பெயர் பெற்றன. இவற்றை முதலாகக் (அடிப்படையாகக்) கொண்டே ஏனைய எழுத்துக்கள் தோன்றுகின்றன. 4

### சார்பெழுத்தின் வகை - 10

60. உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு
அஃகிய இஉஐ ஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத்து ஆகும்.

**கருத்துரை:**

1. உயிர்மெய் 2. முற்றாய்தம் 3. உயிரளபெடை 4. ஒற்றளபெடை 5.குற்றியலிகம் 6. குற்றியலுகரம் 7. ஐகாரக்குறுக்கம் 8. ஔகாரக் குறுக்கம் 9. மகரக் குறுக்கம் 10. ஆய்தக் குறுக்கம் ஆகிய பத்தும் சார்பெழுத்துக்கள் ஆகும்.

**விளக்கவுரை:**

அஃகுதல் - சுருங்குதல்; மாத்திரையில் குறைதல்.

தனிநிலை - ஆய்தம். இவ்வெழுத்து உயிரும் ஆகாமல் மெய்யும் ஆகாமல் தனித்து நிற்பதால், தனிநிலை என்று பெயர் பெற்றது.

முதலெழுத்துக்களைச் சார்ந்துவரும் எழுத்து, சார்பெழுத்து ஆகும். சார்பெழுத்துக்கள் பத்தில் உயிர்மெய் என்பது உயிரையும் மெய்யையும் சார்ந்து பிறப்பது. ஆய்தம், உயிர் மெய்களின் இடையே சார்ந்து வருவது. ஏனைய உயிரளபெடை முதலிய எட்டும் தத்தம் முதலெழுத்துக்களின் திரிவு விகாரத்தால் பிறப்பன. எனவே, 5
இவையெல்லாம் சார்பெழுத்துக்கள் எனப்படும்.

61. உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு உயர் ஆய்தம்
எட்டுஉயிர ளபுஎழு மூன்றுஒற் றளபெடை
ஆறேழ் அஃகும் இம்முப் பான்ஏழ்
உகரம் ஆறாறு ஐகான் மூன்றே
ஔகான் ஒன்றே மஃகான் மூன்றே
ஆய்தம் இரண்டொடு சார்பெழுத்து உறுவிரி
ஒன்றொழி முந்நூற்று எழுபான் என்ப.

**கருத்துரை:**

உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு; முற்றாய்தம் எட்டு: உயிரளபெடை இருபத்தொன்று; ஒற்றளபெடை நாற்பத்திரண்டு; குற்றியலிகரம் முப்பத்தேழு; குற்றியலுகரம் முப்பத்தாறு; ஐகாரக் குறுக்கம் மூன்று; ஔகாரக் குறுக்கம் ஒன்று; மகரக் குறுக்கம் மூன்று; ஆய்தக் குறுக்கம் இரண்டுடன் சார்பெழுத்தின் விரி முந்நூற்றுப்பத் தொன்பது என்று சொல்லுவர் புலவர்.

**விளக்கவுரை:**

உயர் ஆய்தம் - முற்றாய்தம். ஒன்றொழி முந்நூற்றெழுபான் - முந்நூற்றறுபத்தொன்பது. 6

## 2. பெயர்

### பெயர்க்கெல்லாம் பொதுவிலக்கணம்

62. இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின.

**கருத்துரை:**

இடுகுறிப்பெயர், காரணப்பெயர் என்னும் இரண்டும் பல பொருள்களுக்குப் பொதுப் பெயராகவும், ஒவ்வொரு பொருளுக்கே சிறப்புப் பெயராகவும் வரும்.

**விளக்கவுரை:**

எனவே, பெயர் நான்கு வகைப்படும் என்பது பெறப்படும்.

1. இடுகுறிப் பொதுப்பெயர் - மரம்
2. இடுகுறிச் சிறப்புப் பெயர் - பனை
3. காரணப் பொதுப்பெயர் - அணி
4. காரணச் சிறப்புப்பெயர் - சிலம்பு.

**இடுகுறிப்பெயர்:**

ஒரு காரணமும் இல்லாமல் ஒரு பொருளுக்குத் தொன்று தொட்டுச் சான்றோர்களால் இடப்பட்டு வழங்கும் பெயர்.

**காரணப்பெயர்:**

ஏதேனும் ஒரு காரணம் பற்றி இட்டு வழங்கும் பெயர்.

பலபொருள்களுக்கும் பொதுவாய் இடுகுறியாய் வழங்கப்படும் பெயர் இடுகுறிப் பொதுப்பெயர்.

ஒவ்வொரு பொருளுக்கே சிறப்பாய் வழங்கப்படும் பெயர் இடுகுறிச் சிறப்புப் பெயர்.

காரணம் பற்றிப் பல பொருள்களுக்கும் பொதுவாய் வழங்கப்படும் பெயர் காரணப் பொதுப் பெயர்.

காரணம் பற்றி ஒவ்வொரு பொருளுக்கே சிறப்பாய் வழங்கப் படும் பெயர் காரணச் சிறப்புப் பெயர்.

இனி இச்சூத்திரத்திற்கு இரட்டுறமொழிதல் என்னும் உத்தியால் இடுகுறி என்றும் காரணம் என்றும் சொல்லப்படும் பெயர்கள் இடுகுறி, காரணம் என்னும் இரண்டுக்கும் பொதுவாகவும், இடுகுறிக்கே சிறப்பாகவும், காரணத்திற்கே சிறப்பாகவும் வரும் என்று பொருள் கூறுவர். எனவே, இடுகுறிப்பெயர், காரணப்பெயர், காரண இடுகுறிப் பெயர் என்று பெயர் மூவகைப்படும்.

**1. இடுகுறிப்பெயர்:**

இடுகுறியாய் நிற்கும் பெயர்.

(எ.டு.) பொன்.

**2. காரணப் பெயர்:**

காரணத்தால் அமைந்த பெயர்

(எ.டு) பொன்னன்.

**3. காரண இடுகுறிப்பெயர்:**

இது காரணப் பெயருக்கும் இடுகுறிப் பெயருக்கும் பொதுவாக அமைந்த பெயர். காரணம் கருதிய போது, அக்காரணங்களை உடைய பலவற்றிற்கும் பெயராக அமையும்; காரணம் கருதாத போது, இடுகுறி யாய் நின்று ஒவ்வொரு பொருளுக்கே பெயராக வழங்கப்படும்.

(எ.டு) முள்ளி - இது முள் உடைய பல செடிகளையும் குறிக்கும் போது, காரணப் பொதுப் பெயர். இதுவே முள்ளி என்னும் ஒரு வகைச் செடியைக் குறிக்கும்போது காரண இடுகுறிப் பெயர்.

## எழுத்தின் பெயர் 7

### உயிரும் மெய்யும்

63. அம்முதல் ஈராறு ஆவி; கம்முதல்
மெய்ம்மூ வாறு என விளம்பினர் புலவர்.

**கருத்துரை:**

அகரம் முதலிய பன்னிரண்டும் உயிரெழுத்துக்கள்; ககரம் முதலிய பதினெட்டும் மெய்யெழுத்துக்கள் என்று சொல்லுவர் அறிவுடையோர்.

**விளக்கவுரை:**

உயிர்: அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.

மெய்: க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ள், ழ், ற், ன்.

அகரம் முதலிய பன்னிரண்டும் உயிர் போலத் தனித்தியங்கும் ஆற்றல் உடையன; ஆதலால் உயிரெனவும், ககரம் முதலிய

# 2. பதவியல்

## பதத்தின் இலக்கணம் கூறும் இயல்

### பதம்

பதம் இன்னது என்பதும் அதன் வகையும்

128. எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமாம் அதுபகாப் பதம் பகுபதம் என
இருபா லாகி இயலும் என்ப.

**கருத்துரை:**

எழுத்துக்கள் தாமே ஒவ்வொன்றாகத் தனித்தும், இரண்டு முதலாகத் தொடர்ந்தும் பிறபொருளைத் தருமானால் பதமாம்; அப்பதம் பகாப்பதம் பகுபதம் என இரண்டு வகையினை உடையதாகி நடக்கும் என்று புலவர் சொல்லுவர். 1

### ஓரெழுத்தொருமொழி

129. உயிர்மவில் ஆறும் தபநவில் ஐந்தும்
கவசவில் நாலும் யவ்வில் ஒன்றும்
ஆகும் நெடில்நொது ஆங்குறில் இரண்டோடு
ஓரெழுத்து இயல்பதம் ஆறேழ் சிறப்பின.

**கருத்துரை:**

உயிர் வரிசையில் ஆறும், மகவரிசையில் ஆறும், தகரவரிசையில் ஐந்தும், பகர வரிசையில் ஐந்தும், நகர வரிசையில் ஐந்தும், ககர வரிசையில் நான்கும், வகர வரிசையில் நான்கும், சகர வரிசையில் நான்கும், யகர வரிசையில் ஒன்றும் ஆகிய நெட்டெழுத் தால் ஆன மொழிகள் நாற்பதும் நொ, து என்னும் குற்றெழுத்தால் ஆகிய மொழிகள் இரண்டுடன்கூட, ஓரெழுத்தாலாகிய மொழிகள் நாற்பத்திரண்டும் சிறப்புடையன.

**விளக்கவுரை:**

| | |
|---|---|
| (எ.டு.) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ | (உயிர் வரிசை) |
| மா, மீ, மு, மே, மை, மோ | (மகர வரிசை) |
| தா, தீ, தூ, தே, தை | (தகர வரிசை) |
| பா, பூ, பே, பை, போ | (பகர வரிசை) |
| நா, நீ, நே, நை, நோ | (நகர வரிசை) |
| கா, கூ, கை, கோ | (ககர வரிசை) |
| வா, வீ, வை, வெள | (வகர வரிசை) |
| சா, சீ, சே, சோ | (சகர வரிசை) |
| யா | (யகர வரிசை) |
| நொ, து | |

இவை சிறப்பின; எனவே, சிறப்பில்லாதவையும் ஓரெழுத் தொரு மொழிகளில் சிலவுள என்பதாம். அவை கு, கௌ, பீ முதலியன. 2

### தொடரெழுத் தொருமொழி

130. பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும்
எழுத்தீ றாகத் தொடரும் என்ப.

**கருத்துரை:**

பகாப்பதங்கள் இரண்டெழுத்து முதல் ஏழெழுத்து ஈறாகவும், பகுபதங்கள் இரண்டெழுத்து முதல் ஒன்பதெழுத்து ஈறாகவும் தொடரும் என்று புலவர் சொல்லுவர்.

**விளக்கவுரை:**

பகாப்பதம்: அணி, அறம், அகலம், அருப்பம், தருப்பணம், உத்திரட்டாதி.

பகுபதம்: கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், உத்திராடத்தான், உத்திரட்டாதியான்.

நடத்துவிப்பிக்கிறான் எனப் பகுதி முதலிய உறுப்புக்கள் வேறுபட்டு வரும் சொற்களுக்கு இவ்வரையறை இல்லை. 3

### பகாப்பதம்

131. பகுப்பால் பயனற்று இடுகுறி ஆகி
முன்னே ஒன்றாய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை இடைஉரி நான்கும் பகாப்பதம்.

**கருத்துரை:**

பிரிக்கப்படுதலால் பகுதி, விகுதி முதலிய பயனில்லாமல், காரணமில்லாமல் இடப்பட்ட குறியாகி, படைப்புக் காலந்தொட்டு ஒன்றாகி முடிந்து நடக்கின்ற பெயர்ச் சொல்லும், வினைச்சொல்லும் இடைச் சொல்லும், உரிச்சொல்லும் ஆகிய நான்கும் பகாப்பதங்கள் ஆகும்.

**விளக்கவுரை:**

(எ.டு.)

| | | |
|---|---|---|
| நிலம், நீர், நெருப்பு, காற்று | - | பெயர்ப் பகாப்பதம் |
| நட, வா, உண், தின் | - | வினைப் பகாப்பதம் |
| மன், கொல், போல், மற்று | - | இடைப் பகாப்பதம் |
| உறு, கழி, நனி, தவ | - | உரிப் பகாப்பதம் |

4

### பகுபதம்

132. பொருள்இடம் காலம் சினைகுணம் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே.

**கருத்துரை:**

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய

**விளக்கவுரை:**

பொழுதுகொள் வினை பகுபதம் என்றதனால் தெரிநிலை, குறிப்பு என்னும் இருவகை வினையாலணையும் பெயர்களும் பகுபதங்கள் ஆகும்.

(எ.டு.)
பொன்னன் - பொருள்
நாடன் - இடம்
ஆதிரையான் - காலம்
கண்ணன் - சினை  இவை பெயர்ப்பகுபதங்கள்
கரியன் - குணம்
ஊணன் - தொழில்

நடந்தான், நடந்து, நடந்த, நடவான், நடவாத - இவை தெரிநிலை வினைப்பகுபதங்கள்.

பொன்னன், பெரிய, மெல்ல, அன்று, அல்லாத, அன்றி - இவை குறிப்பு வினைப்பகுபதங்கள்.

நடந்தான், நடந்தவன், நடவாதவன் - இவை தெரிநிலை வினையாலணையும் பெயர்ப்பகுபதங்கள்.

பொன்னன், பொன்னவன், இல்லாதவன் - இவை குறிப்பு வினையாலணையும் பெயர்ப்பகுபதங்கள்.

பெயர்ப்பகுபதம், பகுதி, விகுதி இரண்டிலும் பொருட்சிறப்பு உடையதாய்க் காலம் காட்டாமல் வேற்றுமையுருபு ஏற்று வரும். குறிப்பு வினைமுற்றுப் பகுபதம், பகுதியில் பொருட் சிறப்பு உடையதாய்க் காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமையுருபு ஏலாது வரும். குறிப்பு வினையால் அணையும் பெயர்ப் பகுபதம், விகுதியில் பொருட் சிறப்பு உடையதாய்க் காலத்தைக் குறிப்பாகக் காட்டி, வேற்றுமையுருபு ஏற்று வரும். இவையே இம்மூன்றுக்கும் வேறுபாடுகளாம்.

(எ.டு.)
பொன்னனை வணங்கினான் - பெயர்ப் பகுபதம்
சாத்தன் பண்டு பொன்னன் - குறிப்பு வினைமுற்றுப் பகுபதம்
பண்டு பொன்னனைக் கண்டேன் - குறிப்பு வினையால் அணையும் பெயர்ப் பகுபதம்.

தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம், பகுதியில் பொருட் சிறப்பு உடையதாய்க் காலத்தை வெளிப்படையாகக் காட்டி, வேற்றுமையுருபு ஏற்காமல் வரும்.

(எ.டு.) சாத்தன் நடந்தான்.

தெரிநிலை வினையாலணையும் பெயர்ப் பகுபதம், விகுதியில் பொருட்சிறப்பு உடையதாய்க் காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமையுருபு ஏற்றுவரும்.

(எ.டு.) நடந்தானைத் தடுத்தேன்.

பதப்புணர்ச்சிக்குக் கூறப்பட்ட தோன்றல் முதலிய மூன்று புணர்ச்சி விகாரங்களையும் (சூ - 154), வலித்தல் முதலிய ஒன்பது செய்யுள் விகாரங்களையும் (சூ - 155) இது பெறும் என மாட்டுதலால், இச்சூத்திரம் மாட்டெறிந் தொழுகல் என்னும் உத்தி. 6

## 1. பகுதி

134. தத்தம்
பகாப்ப தங்களே பகுதி யாகும்.

**கருத்துரை:**

பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் ஆகியவற்றில், அவற்றின் முதலில் நிற்கும் பகாப்பதங்களே பகுதிகள் ஆகும்.

**விளக்கவுரை:**

பெயர்ப் பகுபதங்களுக்கும், குறிப்புவினைப் பகுபதங்களுக்கும் பெரும்பாலும் பெயர்ச்சொற்களும், சிறுபான்மை இடைச்சொற்களும் பகுதிகளாக வரும்.

| (எ.டு.) பகுபதம் | பகுதி | | |
|---|---|---|---|
| பொன்னன் | பொன் | - | பொருள் |
| அகத்தன் | அகம் | - | இடம் |
| ஆதிரையான் | ஆதிரை | - | காலம் |
| பல்லன் | பல் | - | சினை |
| கரியன் | கருமை | - | குணம் |
| கூத்தன் | கூத்து | - | தொழில் |

இவையே குறிப்புவினைப் பகுபதத்திற்கு உதாரணம் ஆகும்.

அவன், எவன் - இப்பெயர்ப் பகுபதங்களில், அ, எ என்னும் இடைச்சொற்கள் பகுதிகள் ஆயின.

கடியன் - இச்சொல்லில் கடி என்னும் உரிச்சொல் பகுதியாயிற்று. 7

## பண்புப் பகுதிகளுக்குச் சிறப்புவிதி

135. செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை உண்மை நுண்மை இவற்றுஎதிர்
இன்னவும் பண்பின் பகாநிலைப் பதமே.

**கருத்துரை:**

செம்மை முதலாகக் கூறப்பட்ட பதினொன்றும், இவற்றுக்கு எதிர் மறையாக வருகின்ற வெண்மை முதலியவையும், இவை போன்ற பிறவும் பண்புப் பொருளில் இருந்து வேறுபொருள் பகுக்க முடியாத தன்மை வாய்ந்த பதங்கள் ஆகும்.

(எ.டு.)

| | | | | |
|---|---|---|---|---|
| செம்மை | x | வெண்மை, கருமை, பொன்மை, பசுமை. | | |
| சிறுமை | x | பெருமை | மென்மை | x வன்மை |
| சேய்மை | x | அண்மை | மேன்மை | x கீழ்மை |
| தீமை | x | நன்மை | திண்மை | x நொய்ம்மை |
| வெம்மை | x | தண்மை | உண்மை | x இன்மை |
| புதுமை | x | பழமை | நுண்மை | x பருமை |

இன்னவும் என்பதனால் அருமை, இளமை முதலிய பண்புப் பதங்களும் கொள்ளப்படும்.

இவையெல்லாம் சொல் நிலையால் பகுபதங்கள். ஆனால், மை விதிக்குப் பகுதிப்பொருள் அல்லது வேறு பொருள் இல்லாமையால், பொருள் நிலையயால் பகாப்பதங்கள் என்பதனை அறிவித்தற்காகப் ''பண்பிற் பகா'' என்று கூறினார். இவை மை விகுதியின்றி இயங்காமையால், இவ்விகுதியையும் பகுதியாகவே கொண்டு, பின்வரும் விகுதியோடு புணர்க்கப்படும் என்பதை அறிவித்தற்கு நிலைப்பதம் என்று கூறினார்.

பண்புப் பகாப்பதம் என்று கூறாமல் பண்பிற் பகாநிலைப் பதம் என்று கூறியது, **சொற்பொருள் விரித்தல்** என்னும் உத்தி. செம்மை சிறுமை முதலிய வாய்பாடுகளைக் கூறியது, **எடுத்துக் காட்டல்** என்னும் உத்தி. 8

136. ஈறுபோதல் இடை உகரம் இய்யாதல்
ஆதிநீடல் அடி அகரம் ஐ ஆதல்
தன்ஒற்று இரட்டல் முன்நின்ற மெய்திரிதல்
இனம்மிகல் இனையவும் பண்பிற்கு இயல்பே.

**கருத்துரை:**

இறுதியிலுள்ள மை விகுதி கெடுதல், நடுவில் நின்ற உகரம் இகரம் ஆதல், முதலில் நின்ற குற்றெழுத்து நெட்டெழுத்தாதல், முதலில் நின்ற அகரம் ஐகாரம் ஆதல், தன் மெய் இடையில் மிகுதல், முன் நின்ற மெய் வேறொரு மெய்யாகத் திரிதல், வரும் எழுத்திற்கு இன எழுத்து மிகுதல் என்பனவும், இவை போல்வன பிறவும் பண்புச் சொற்களுக்கு இயல்பு ஆகும்.

**விளக்கவுரை:**

இவ்விகாரங்கள் பண்புச் சொற்களோடு விகுதி புணர்தலே யன்றிப் பதம் புணர்வதற்கும் அமையும்; எனவே, இது **ஒப்பின் முடித்தல்** என்னும் உத்தி.

(எ.டு.)

நல்லன் (நன்மை+அன்) - நன்மை என்பதில் மை விகுதி கெட்டது.

கரியன் (கருமை+அன்) - கருமை என்பதில் மை விகுதி கெட்டு இடைநின்ற உகரம் இகரமாயிற்று.

முன் இகரம் வரும்; மகர, வகரங்களின் முன் உகரம் வரும்; நகரத்தின் முன் அகரம் வரும். இணைந்து முன் நிற்கும் ரகர மெய்யின் முன் உகரம் வரும்.

**விளக்கவுரை:**

(எ.டு) தியாகம், வாக்கியம், கிரமம், விக்கிரமம், கிலேசம், சுக்கிலம் - ய, ர, ல முன் இகரம் வந்தது.

பதுமம், பக்குவம் - ம, வ முன் வகரம் வந்தது.

அரதநம் - ந முன் அகரம் வந்தது.

அருத்தம் - ரகத்தின் பின் உகரம் வந்தது.

22

**தமிழெழுத்தின் சிறப்பெழுத்தும் பொதுவெழுத்தும்**

150. ற ன ழ எ ஒவ்வும் உயிர்மெய் உயிரளபு
அல்லாச் சார்பும் தமிழ்; பிற பொதுவே.

**கருத்துரை:**

முதலும் சார்பும் எனத் தமிழெழுத்துக்கள் நாற்பது. இவற்றுள் ற, ன, ழ, எ, ஒ என்னும் ஐந்தும், உயிர்மெய்யும், உயிரளபெடையும் அல்லாச் சார்பெழுத்துக்கள் எட்டும் ஆகிய பதின்மூன்றும் தமிழுக் கேயுரிய சிறப்பெழுத்துக்கள். எஞ்சிய இருபத்தேழு எழுத்துக்களும் தமிழுக்கும் ஆரியத்திற்கும் பொதுவெழுத்துக்கள் ஆகும். 23

பதவியல் முற்றும்.

## 3. உயிரீற்றுப் புணரியல்

உயிரெழுத்துக்களை இறுதியாகக் கொண்ட நிலைமொழிக ளோடு, உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் முதலாகக் கொண்ட வருமொழிகள் புணர்தலைக் கூறும் இயல்.

**புணர்ச்சி**

151. மெய்உயிர் முதல்ஈறு ஆம்இரு பதங்களும்
தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளில் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத்து இயைவது புணர்ப்பே.

**கருத்துரை:**

மெய்யையும் உயிரையும் முதலும் இறுதியுமாகவுடைய பகாப்பதம் பகுபதம் என்னும் இரண்டு பதங்களும் தன்னோடு தானும் பிறிதொடு பிறிதுமாய், அல்வழிப் பொருளினாலேனும் வேற்றுமைப் பொருளினாலேனும் பொருந்துமிடத்து, நிலை மொழியும் வரு மொழியும் இயல்பாகவாயினும் விகாரமாக வாயினும் பொருந்துவது முன் சொல்லப்பட்ட புணர்ச்சியாம்.

**விளக்கவுரை:**

மெய்யுயிர் முதல் ஈறாம் எனவே, மெய்ம்முதல் மெய்யீறு, உயிர்முதல் உயிரீறு, மெய்ம்முதல் உயிரீறு, உயிர்முதல் மெய்யீறு எனப் புணர்ச்சி நால்வகைப்படும் என்க.

(எ.டு) தமிழ் - மெய்ம்முதல் மெய்யீறு
அறிவு - உயிர் முதல் உயிரீறு
பணி - மெய்ம்முதல் உயிரீறு
அவன் - உயிர்முதல் மெய்யீறு

இயல்பு, இயற்கை, தன்மை என்பன ஒருபொருட் சொற்கள். விகாரம், செயல், செயற்கை, விதி என்பன ஒரு பொருட்சொற்கள். 1

## அல்வழி, வேற்றுமை

152. **வேற்றுமை ஐம்முதல் ஆறாம் அல்வழி**
**தொழில்பண்பு உவமை உம்மை அன்மொழி**
**எழுவாய் விளிஈ ரெச்சம்முற்று இடைஉரி**
**தழுவு தொடர் அடுக்கு எனஈ ரேழே.**

**கருத்துரை:**

வேற்றுமைப் புணர்ச்சியாவது; ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறு உருபுகளும் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரப் பதங்கள் பொருந்தும் தொடர்ச்சியாகும்.

அல்வழிப் புணர்ச்சியாவது: வினைத்தொகையும், பண்புத் தொகையும், உவமைத் தொகையும், உம்மைத் தொகையும், அன்மொழித் தொகையும், எழுவாய்த் தொடரும், விளித்தொடரும், பெயரெச்சத் தொடரும், வினையெச்சத் தொடரும், தெரிநிலை வினைமுற்றுத் தொடரும், குறிப்பு வினைமுற்றுத் தொடரும், இடைச் சொற்றொடரும், உரிச்சொற்றொடரும், அடுக்குத் தொடரும் எனப் பதங்கள் பொருந்தும் தொடர்ச்சி பதினான்கு ஆகும்.

**விளக்கவுரை:**

வேற்றுமைப் புணர்ச்சி, வேற்றுமையுருபு மறைந்தோ, வேற்றுமையுருபு விரிந்தோ வருமாறு புணர்வது.

(எ.டு)

**வேற்றுமைத் தொகை - உருபு - வேற்றுமை விரி**
**பாடம்படித்தான் + (ஐ) - பாடத்தைப் படித்தான்**
**கல்லெறிந்தான் + (ஆல்) - கல்லால் எறிந்தான்**
**கொற்றன்மகன் + (கு) - கொற்றனுக்கு மகன்**
**மலை வீழருவி + (இன்) - மலையின் வீழருவி**
**சாத்தன்கை + (அது) - சாத்தனது கை**
**குன்றக் கூகை + (கண்) - குன்றத்தின்கட் கூகை**

அல்வழிப் புணர்ச்சி; வேற்றுமையுருபு அல்லாத வழியில் புணர்வது; இது தொகைநிலைத் தொடர், தொகாநிலைத் தொடர் என இரண்டு வகைப்படும்.

1. கொல்யானை - வினைத்தொகை
2. கருங்குவளை - பண்புத் தொகை
3. மதிமுகம் - உவமைத்தொகை
4. இராப்பகல் - உம்மைத்தொகை
5. பொற்றொடி - அன்மொழித் தொகை

இவை ஐந்தும் தொகைநிலைத் தொடர்கள்

வேலன் வந்தான் - எழுவாய்த் தொடர்
வேலா வா - விளித்தொடர்
வந்தவேலன் - பெயரெச்சத்தொடர்
வந்து போனான் - வினையெச்சத்தொடர்
வந்தான் வேலன் - தெரிநிலை வினைமுற்றுத்தொடர்
பெரியன் வேலன் - குறிப்பு வினைமுற்றுத்தொடர்
மற்றொன்று - இடைச் சொற்றொடர்
நனிபேதை - உரிச்சொற்றொடர்
பாம்பு பாம்பு - அடுக்குத் தொடர்

இவை ஒன்பதும் தொகாநிலைத் தொடர்கள். மேற்கூறிய வேற்றுமைப் புணர்ச்சியும் அல்வழிப் புணர்ச்சியும் தழுவு தொடர்கள் ஆகும்.

தழுவு தொடர் ஆறும் பதினான்கும் எனக் கூறவே, அவ்விரு வழியிலும் தழாத் தொடரும் சில உள என்பதும் வெளிப்படும். நீர்க்குடம் என்பது நீரை உடைய குடம் என விரிக்கப்படுதலால், நீர் என்பது குடம் என்பதைத் தழுவாது தொடர்ந்தது; இது தழாத்தொடராகிய வேற்றுமைப் புணர்ச்சி.

சுரை யாழ அம்மி மிதப்ப என்பது, சுரை மிதப்ப அம்மி ஆழ எனக் கூட்டப்படுதலால், சுரை என்பது ஆழ என்பதையும் அம்மி என்பது மிதப்ப என்பதையும் தழுவாது தொடர்ந்தன; இவை தழாத் தொடராகிய அல்வழிப்புணர்ச்சி.

நிலைமொழியானது வருமொழியோடு பொருட்பொருத்த முறத் தழுவாத தொடர் தழாத்தொடர்; பொருட் பொருத்தமுறத் தழுவிய தொடர் தழுவு தொடர்.

2

## இயல்பு புணர்ச்சி

153. விகார மனைத்தும் மேவலது இயல்பே.

**கருத்துரை:**

மேல் சொல்லப்படும் விகார வகையனைத்தும் அடையாதது இயல்பு புணர்ச்சியாகும்.

**விளக்கவுரை:**

(எ.டு) பொன்+மலை = பொன்மலை - மெய்முன் மெய் புகழ்+அழகு = புகழழகு - மெய் முன் உயிர், ஒளி+மணி = ஒளிமணி - உயிர் முன் மெய்

## விகாரப் புணர்ச்சி

154. தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்றும் மொழிமூ விடத்தும் ஆகும்.

**கருத்துரை:**

எழுத்தாயினும் சாரியையாயினும் தோன்றுதலும், ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாக வேறுபடுதலும், இருக்கும் எழுத்துக் கெடுதலும் மேற்சொன்ன விகாரமாகும். இம்மூவகை விகாரங்களும், நிலைமொழி வருமொழிகளின் முதல் இடை கடை என்னும் மூன்றிடங்களிலும் ஏற்றபடி வரும்.

**விளக்கவுரை:**

(எ.டு)

பூ+கொடி = பூங்கொடி - வருமொழி முதலில் மெய் தோன்றிற்று - தோன்றல் விகாரம்.

பல் + தாழிசை - பஃறாழிசை - வருமொழி முதலிலும் நிலைமொழி யீற்றிலும் மெய்கள் திரிந்தன - திரிதல் விகாரம்.

நிலம் + வலயம் = நிலவலயம் - நிலைமொழியின் இறுதி மெய்கெட்டது - கெடுதல் விகாரம்.

ஆறு + பத்து = அறுபத்து - நிலைமொழியின் முதலுயிர் திரிந்து, வருமொழியின் இடையொற்றுக் கெட்டது.

பல + பொருள் = பல்பொருள் - நிலைமொழி இறுதியில் உள்ள உயிர் கெட்டது.

நாழி + உரி = நாடுரி - நிலைமொழி இறுதியில் உள்ள உயிர்மெய் கெட்டு டகரமெய் தோன்றிற்று.

தமிழ் + பிள்ளை = தமிழப் பிள்ளை - நிலைமொழி இறுதியில் சாரியை தோன்றிற்று.

பனை + காய் = பனங்காய் - நிலைமொழி இறுதியில் உள்ளஉயிர் கெட்டுச் சாரியை தோன்றிற்று.

ஒன்பது + பத்து = தொண்ணூறு - நிலைமொழி வருமொழிகள் முதல், இடை, கடை என்னும் மூன்றிடத்தும் விகாரப்பட்டன.

## செய்யுள் விகாரம்

155. வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி.

# 4. மெய்யீற்றுப் புணரியல்

மெய்யெழுத்துக்களை இறுதியாகக் கொண்ட நிலைமொழி உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் முதலாகக் கொண்ட வருமொழிகள் புணர்தலைக் கூறும் இயல்.

## மெய்யீற்றுப் பொது விதி

### மெய்யீற்றின் முன் உயிர்

204. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

**கருத்துரை:**

நிலைமொழியின் இறுதியில் நின்ற மெய்யின்மேல், வருமொழி முதலிலுள்ள உயிரெழுத்து வந்து ஒன்றுபட்டு நிற்பது இயல்பு புணர்ச்சியாகும்.

**விளக்கவுரை:**

(எ-டு) தோன்றல் + அழகன் = தோன்றலழகன் (அல்வழி)

வேல் + எறிந்தான் = வேலெறிந்தான் (வேற்றுமை)

மெய்யெழுத்தும் உயிரெழுத்தும் கூடி உயிர்மெய்யாய், மெய்யின் வடிவில் புள்ளியும் உயிர்வடிவு முழுமையும் கெட்டு நிற்பதால், இதனைச் சிலர் விகாரப் புணர்ச்சி என்பர். இக் கருத்தை மறுக்கவே இயல்பு புணர்ச்சி என்றார். மெய்யும் உயிரும் சேரும்போது, ஒலி வடிவில் மாறுபாடு இல்லை; எனவே, இயல்பு புணர்ச்சி என்பதே பொருந்தும். 1

205. தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்

**கருத்துரை:**

தனித்த குற்றெழுத்தின் முன்நின்ற மெய்யெழுத்து, வருமொழி முதலில் உயிர்வந்தால் இரட்டிக்கும்.

**விளக்கவுரை:**

(எ-டு) மண் + அரிது = மண்ணரிது (அல்வழி)

பொன் + அணி = பொன்னணி (வேற்றுமை) 2

### மெய்யீற்றின் முன் மெய்

206. தன்மொழி மெய்ம்முன் யவ்வரின் இகரம்
துன்னும் என்று துணிநரும் உளரே.

**கருத்துரை:**

தன்னை (யகரத்தை) ஒழிந்த ஞ, ண, ந, ம, ன, ர, ல, வ, ழ, ள என்னும் மொழிக்கு இறுதியில் வரும் பத்து மெய்களின் முன்னும் யகரம் வந்தால், இகரச் சாரியை இடையில் வரும் என்று அரிதாகக் கொள்வாரும் சிலர் உளர்.

**விளக்கவுரை:**

(எ-டு) வேள் + யாவன் = வேளியாவன் (அல்வழி)

மண் + யானை = மண்ணியானை (வேற்றுமை)

'துணிநரும்' என்ற எதிர்மறையாகிய இழிவு சிறப்பும்மையால், வேள்யாவன், மண்யாது என்று பொது விதி (சூ. 153) பெறும் என்பவரே பலர் ஆவர்.

**சில் முதனிலைத் தொழிற்பெயர்க்கும் ஏவற்கும் சிறப்பு விதி** 3

207. ஞ ண ந ம ல வ ள ன ஒற்றுஇறு தொழிற் பெயர்
ஏவல் வினைநனி யவ்வல் மெய்வரின்
உவ்வுறும்; ஏவல் உறாசில சில்வழி.

**கருத்துரை:**

ஞ, ண, ந, ம, ல, வ, ள, ன என்னும் எட்டு மெய்களையும் இறுதியாகக் கொண்ட முதல்நிலைத் தொழிற்பெயர்களும் ஏவல் வினைகளும் ஆகிய இவற்றின் முன், யகரம் அல்லா மெய்கள் வருமாயின், பெரும்பாலும் உகரச் சாரியை இறுதியில் பெறும்; சில ஏவல் வினைகள் சில இடங்களில் இவ்வாறு உகரச் சாரியை பெறா.

**விளக்கவுரை:**

**முதனிலைத் தொழிற்பெயர் உகரச் சாரியை பெறுதல்**

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| உரிஞ் + கடிது = உரிஞுக்கடிது | உரிஞ் + கடுமை = உரிஞுக்கடுமை |
| உண் + சிறிது = உண்ணுச்சிறிது | உண் + சிறுமை = உண்ணுச்சிறுமை |
| பொருந் + தீது = பொருநுத்தீது | பொருந் + தீது = பொருநுத்தீமை |
| திரும் + பெரிது = திருமுப்பெரிது | திரும் + பெருமை = திருமுப்பெருமை |
| வெல் + ஞான்றது = வெல்லுஞான்றது | வெல் + ஞாற்சி = வெல்லுஞாற்சி |
| வவ்+நீண்டது = வவ்வுநீண்டது | வவ் + நீட்சி = வவ்வுநீட்சி |
| துள் + மாண்டது = துள்ளுமாண்டது | துள் + மாட்சி + துள்ளுமாட்சி |
| தின் + வலிது = தின்னுவலிது | தின் + வலிமை = தின்னுவலிமை |

**ஏவல்வினைகள் உகரச் சாரியை பெறுதல்**

**அல்வழியில் மட்டுமே**

| | |
|---|---|
| உரிஞ் + கொற்றா = உரிஞுகொற்றா | வெல் + ஞெள்ளா = வெல்லுஞெள்ளா |
| உண் + சாத்தா = உண்ணுசாத்தா | வவ் + நாகா = வவ்வுநாகா |

பொருந் + தேவா = துன் + மனிதா =

பொருநு+தேவா துன்+மனிதா=

பொருநுதேவா துன்னுமனிதா

திரும் + பூதா = திருமுபூதா தின் + வளவா = தின்னுவளவா

ண, ன, ல, ள என்னும் நான்கு ஈறும் உகரச் சாரியை பெற்றும் பெறாதும் வரும். ஞ, ந, ம, வ என்னும் நான்கு ஈறும் உகரம் பெற்றே வரும்.

4

**நகர ஈற்றுத் தொழிற் பெயருக்குச் சிறப்பு விதி**

208. நவ்விறு தொழிற் பெயர்க்கு அவ்வுமாம் வேற்றுமை

**கருத்துரை:**

நகரத்தை இறுதியாக உடைய தொழிற் பெயருக்கு வேற்றுமைப் புணர்ச்சியில் அகரச் சாரியையும் வரும்.

**விளக்கவுரை:**

(எ.டு) பொருந் + கடுமை = பொருநக் கடுமை

பொருந் + நன்மை = பொருந நன்மை

பொருந் + வன்மை = பொருந வன்மை

அகரச் சாரியை பெற்றது.

5

**ணகர னகர ஈறு**

209. ணன வல்லினம் வரட் டறவும் பிறவரின்
இயல்பு மாகும் வேற்றுமைக்கு அல்வழிக்கு
அனைத்துமெய் வரினும் இயல்பா கும்மே.

**கருத்துரை:**

வேற்றுமைப் புணர்ச்சியில்(1) வருமொழி முதலில் வல்லினம் வந்தால் ண, ன என்ற நிலைமொழி இறுதிமெய்கள், முறையே ட, ற என்ற மெய்களாகத் திரியும்; (2) மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாகும்; (3) அல்வழிப் புணர்ச்சியில் வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூவின மெய்களும் வந்தால் இயல்பாகும்.

**விளக்கவுரை:**

(எ.டு)

1. சிறுகண் + களிறு = சிறுகட் களிறு

பொன் + குடம் = பொற்குடம்

வேற்றுமையில் வல்லினம் வர ட, ற ஆயின.

2. மண் + ஞாற்சி = மண் ஞாற்சி - மெல்லினம்

மண் + யாப்பு = மண் யாப்பு - இடையினம்

பொன் + ஞாற்சி = பொன்ஞாற்சி - மெல்லினம்

பொன் + யாப்பு = பொன்யாப்பு - இடையினம்

வேற்றுமையில் பிற இனம் வர இயல்பாயின.

ண ன

3. மண் + பெரிது = மண்பெரிது பொன் + பெரிது = பொன்பெரிது
மண் + நீண்டது = மண் நீண்டது பொன் + நீண்டது = பொன் நீண்டது
மண் + வலிது = மண் வலிது பொன் + வலிது = பொன்வலிது

அல்வழியில் மூவினமும் வர இயல்பாயின.

ஒப்பின் முடித்தல் என்னும் உத்தியால், ணகரம் சொல்லுமிடத்து னகரத்தையும் சேர்த்துக் கூறினார். 6

### ணகர னகர ஈறு கெடுதல்

210. குறிஅணைவு இல்லா ணனக்கள் வந்த
நகரம் திரிந்துழி நண்ணும் கேடே.

**கருத்துரை:**

தனிக் குற்றெழுத்தை அடுத்து வராமல் ஒரு மொழி, தொடர் மொழிகளைகச் சார்ந்து வரும் ணகர னகர மெய்கள், வருமொழிக்கு முதலில் வந்த நகரம் திரிந்த இடத்தில் கெடுதலைப் பொருந்தும்.

**விளக்கவுரை:**

(எ.டு)

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| தூண் + நன்று = தூணன்று | தூண் + நன்மை = தூணன்மை |
| பசுமண் + நன்று =பசுமணன்று | பசுமண் + நன்மை = பசுமணன்மை |
| கோன் + நல்லன் + கோனல்லன் | கோன் + நன்மை = கோனன்மை |
| அரசன் + நல்லன் = அரசனல்லன் | அரசன் + நன்மை = அரசனன்மை 7 |

### சில ணகர ஈற்றுப் பெயர்க்குச் சிறப்பு விதி

211. சாதி குழூஉப் பரண் கவண்பெயர் இறுதி
இயல்பாம் வேற்றுமைக்கு; உணவுஎண் சாண்பிற
டவ்வா கலும்ஆம் அல்வழி யும்மே.

**கருத்துரை:**

சாதிபற்றி வரும் பெயர், குழூஉ (கூட்டம்) பற்றி வரும் பெயர், பரண், கவண் என்னும் பெயர்கள் ஆகியவற்றின் இறுதியில் வரும் ணகரம், வேற்றுமையில் வல்லினம் வரின் இயல்பாகும். உணவுக்கு உரிய எள் என்னும் சொல்லின் திரிபாகிய எண் என்னும் பெயர், சாண் என்னும் அளவுப் பெயர் ஆகியவற்றின் இறுதியில் வரும் ணகரம், அல்வழியில் வல்லினன் வரின், டகரமாகத் திரியும்.